RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 175 | ஜுன்.30 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



# தேர்தல் கூட்டணி குறித்த தேமுதிக நிலைப்பாடு ஜனவரியில் அறிவிக்கப்படும்

## பிரேமலதா விஜயகாந்த்

கோவை: ஜுன்.30-

2026 தேர்தல் கூட்டணி நிலைப்பாடு குறித்து தங்கள் கட்சி சார்பில் ஜனவரி மாதம் நடைபெறும் மாநாட்டில் அறிவிக்கப்படும் என, தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: கட்சி நிர்வாகிகளின் திருமண நிகழ்வு, ஆலோசனைக் கூட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க கோவை வந்தேன். இரவு கிருஷ்ணகிரி சென்று நாளை அங்கு மா விளைச்சலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காக நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கிறேன்.

அனைவரும் கல்வி கற்க வேண்டும், படித்தால் மட்டும் தான் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும். தமிழ்நாட்டில் உள்ள அனைவரும் கற்றவர்களாக இருக்க வேண்டும் என்பது தான் எங்கள் கட்சியின் விருப்பம். காங்கிரஸ் கட்சி விழாவில் சுதீஷ் கலந்து கொண்டது பல ஆண்டு காலமாக, தொடரும் நட்பின் வெளிப்பாடு. அதற்கும் அரசியலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

தேமுதிக தற்போது எட்டு மண்டலமாக பிரிந்து தமிழ்நாடு முழுவதும் 8 மண்டல பொறுப்பாளர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள், தொகுதி பொறுப்பாளர்களை அமைத்து தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் பூத் கமிட்டி அமைக்கும் பணிகள் வெகு விரைவாக நடைபெற்று வருகிறது. ஒரு மாதத்திற்கு பின் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. கட்சியின் வளர்ச்சியில் மட்டுமே அதிகம் கவனம் செலுத்தி வருகிறோம். கடலூரில் 2026 ம் ஆண்டு ஜனவரி 9ம் தேதி மாநாடு நடைபெற உள்ளது. அன்றைய தினம் தேர்தல் கூட்டணி நிலைப்பாடு குறித்து அறிவிக்கப்படும். தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணியில் தமிழக கட்சி தலைமை வகித்தால் சிறப்பாக இருக்கும். கூட்டணி என்பது வரவேற்கத்தக்கது.

போதைப்பொருள் பயன்பாடு தொடர்பாக நடிகர்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்தை அவர்கள் மட்டும் அதை பயன்படுத்தியதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. தமிழகமே போதை வஸ்துக்களால் மூழ்கி இருக்கிறது. இது யாரும் மறுக்க முடியாத ஒன்றாகும். போதை இல்லாத, டாஸ்மாக் மதுமானம் இல்லாத, கள்ளச் சாராயம் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும்.

கோவை மாவட்டத்தில் அனைத்து சாலைகளும் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. இதனால் பல்வேறு விபத்துக்கள் நடைபெற்று உயிரிழப்பு சம்பவங்கள் தொடர்கின்றன. மேம்பால பணிகள் தொய்வாக மேற்கொள்ளப்படுகின்றன. குப்பை தரம் பிரித்தல், பாதாள சாக்கடை திட்ட பணி என பல பிரச்சினைகள் உள்ளன. கோவை என்றாலே சுத்தமான நகரம் என்பதை கேப்டன் காலத்தில் நான் பார்த்துள்ளேன். ஆனால் இன்று அனைத்தும் தலைகீழாக மாறியுள்ளது. மிகவும் வருந்தத்தக்கது. இதில், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நடிகர் விஜய் பொருத்தவரை நான் அவருக்கு அறிவுரை கூற வேண்டியது இல்லை. அவருக்கான முடிவை அவர் தான் எடுக்க வேண்டும்.'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# காவல் நிலைய மரணங்களுக்கு போலி கண்ணீர் தாண்டி முதல்வரின் பதில் என்ன?



சென்னை: ஜுன்.30-

காவல் நிலைய மரணங்கள் தொடர்பான திரைப்படங்களை பார்த்து போலிக் கண்ணீர் வடிக்கும் முதல்வர், தன் ஆட்சியில் சாமானிய மக்களின் மீது காவல்துறையின் மூலம் மனிதாபிமானமற்ற முறையில் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார் ? என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வினவியுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது வலைதள பக்கத்தில், "சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் ஒருவர் காவலர்கள் தாக்கியதில் உயிரிழந்திருப்பதாக நாளிதழ்களிலும் ஊடகங்களிலும் வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்கி, அவர்களின் புகார்களுக்கு தீர்வு காண வேண்டிய காவல்துறை, விசாரணை எனும் பெயரில் கண்ணியமற்ற முறையிலும், காட்டு மிராண்டித்தனமாகவும் நடந்து கொள்வதே காவல் மரணங்களுக்கு அடிப்படை காரணம் என்ற புகார் எழுந்துள்ளது.

காவல் நிலைய மரணங்கள் தொடர்பான திரைப்படங்களை பார்த்து போலிக் கண்ணீர் வடிக்கும் முதல்வர், தன் ஆட்சியில் சாமானிய மக்களின் மீது காவல்துறையின் மூலம் மனிதாபிமானமற்ற முறையில் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார் ?

ஒருவரை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் காவல்துறையினருக்கு இல்லை என்றாலும், காவலர்கள் பற்றாக்குறை, அளவுக்கு அதிகமான பணிச்சுமை, தீராத மன அழுத்தம் ஆகியவை காவலர்களுக்கு உட்பட்ட அதிகாரத்தை மீறுவதற்கு காரணமாக அமைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

எனவே, காவல் நிலைய மரணங்களே இல்லை என்ற நிலையை அடைய வேண்டும் என மேடையில் பேசுவதோடு தன் கடமை நிறைவடைந்துவிட்டதாக கருதாமல் அதனை செயல்பாட்டிற்கு கொண்டுவருவதற்கான காவல்துறை சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என முதல்வர் ஸ்டாலினை வலியுறுத்துகிறேன்'' என்று தினகரன் கூறியுள்ளார்.

# மார்ச் 2026க்குள் மாவோயிஸம் நாட்டிலிருந்து ஒழிக்கப்படும்: அமித்ஷா சூளுரை



நிஜாமாபாத்: ஜுன்.30-

"2026ம் ஆண்டு மார்ச் 31க்குள் மாவோயிசம் மற்றும் நக்சல் சித்தாந்தத்திலிருந்து நாட்டை விடுவிப்பதில் மத்திய அரசு உறுதியாக இருக்கிறது'' என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சூளுரைத்தார். மேலும், துப்பாக்கிகளை கைவிட்டு சரணடையுமாறு மாவோயிஸ்டுகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

தெலங்கானாவின் நிஜாமாபாத்தில் இன்று (ஜுன் 29) நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அமித் ஷா, "சரணடைய விரும்புவோர், வடகிழக்கில் ஆயிரக்கணக்கான நக்சல்கள் செய்தது போல் சரணடைந்து பிரதான நீரோட்டத்தில் இணையலாம். ஆனால் துப்பாக்கிகளை எடுப்பவர்கள் தப்பிக்க மாட்டார்கள். கடந்த 18 மாதங்களில் 1,500க்கும் மேற்பட்ட நக்சல்கள் சரணடைந்துள்ளனர். வடகிழக்கில் 10,000க்கும் மேற்பட்ட முன்னாள் நக்சல்கள் வன்முறையைக் கைவிட்டு, ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ளனர்.'' என்றார்.

மாவோயிஸ்டுகளுடன் உரையாடல் நடத்த வேண்டும் என தெலங்கானா காங்கிரஸ் பரிந்துரைத்தது குறித்து கேள்வி எழுப்பிய அமித்ஷா, "நக்சல் வன்முறையால் இறந்த ஆயிரக்கணக்கான பழங்குடியினரின் குடும்பங்களுக்கு நீங்கள் என்ன சொல்வீர்கள்?. காவல்துறை அதிகாரிகள், பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் அப்பாவி பொதுமக்களைக் கொன்றவர்களிடம் உரையாடல் நடத்துவதை நியாயப்படுத்துவீர்களா?'' என்று கூறினார். மேலும், பொதுமக்களிடம், "நக்சல்களை ஒழிக்க வேண்டுமா இல்லையா?'' என்று நேரடியாக கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து பேசிய அவர், "மக்கள் ஆட்சி செய்வதற்கும் நக்சல் சித்தாந்தத்தை ஒழிப்பதற்கும் தான் அதிகாரம் அளித்தார்கள் என்பதை முதல்வர் ரேவந்த் ரெட்டி புரிந்து கொள்ள வேண்டும். காங்கிரஸ் கட்சி நாடு முழுவதும் உள்ள மாவோயிஸ்டுகளுக்கு தெலங்கானாவை ஒரு புகலிடமாக மாற்றக்கூடும் என்று நான் அஞ்சுகிறேன்'' என்று அவர் கூறினார்.

# "காவல் நிலையத்தில் இளைஞர் உயிரிழந்த சம்பவத்துக்காக முதல்வர் பதவி விலக வேண்டும்" : அன்புமணி



சென்னை: ஜுன்.30-

திருப்புவனம் காவல் நிலையத்தில் இளைஞர் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார். மனசாட்சி இருந்தால் முதல்வர் விலக வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் காவல்நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அஜித்குமார் என்ற இளைஞர் காவலர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. மனித உரிமைகளை சிறிதும் மதிக்காமல் ஸ்டாலின் காவல்துறை இளைஞரை அடித்தே கொலை செய்திருப்பது கடுமையாக கண்டிக்கத்தக்கது.

திருப்புவனத்தை அடுத்த மடப்புரம் கிராமத்தில் உள்ள கோயிலுக்கு வந்த மருத்துவர் ஒருவர், அவரது மகிழுந்தில் வைத்திருந்த 10 சவரன் தங்க நகைகளை காணவில்லை என்று அளித்த புகாரின் அடிப்படையில், அவரது மகிழுந்தை நிறுத்துவதற்கு உதவி செய்த கோயிலின் தற்காலிக ஊழியர் அஜித்குமார் என்பவரை காவல்துறையினர் அழைத்துச் சென்று விசாரணை நடத்தியுள்ளனர்.

அப்போது அவர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கியதில் இளைஞர் அஜித்குமார் உயிரிழந்து விட்டார். அவரது உயிரிழப்புக்குக் காரணமான காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி அங்குள்ள மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும்? என்பதற்கான விதிகளை உச்சநீதிமன்றம் வகுத்துள்ள நிலையில், அவற்றை மதிக்காத காவல்துறையினர் அஜித்குமாரை கொடூரமாகத் தாக்கி படுகொலை செய்துள்ளனர். தமிழகம் மட்டுமின்றி, ஒட்டுமொத்த இந்தியாவையும் உலுக்கிய சாத்தான்குளம் காவல்நிலையப் படுகொலைகள் எவ்வாறு நடந்தனவோ, அதற்கு சற்றும் குறைவில்லாத வகையில் அஜித்குமார் கொல்லப்பட்டுள்ளார். இதற்காக தமிழக காவல்துறையும், அதற்கு பொறுப்பு வகிக்கும் முதலமைச்சரும் தலைகுனிய வேண்டும்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் படுதோல்வி அடைந்துவிட்ட காவல்துறை அப்பாவிகளை விசாரணைக்கு அழைத்துச் சென்று படுகொலை செய்வதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறது. திமுக ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த 4 ஆண்டுகளில் 28 பேர் காவல்நிலையங்களில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர். இதைவிட கொடுமையான மனித உரிமை மீறல்கள் இருக்க முடியாது.

சாத்தான்குளத்தில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்ட போது,''பேய் ஆட்சி செய்தால் பிணந்திண்ணும் சாத்திரங்கள் என்பதை இந்த படுகொலைகள் நினைவுபடுத்துகின்றன. இதற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் உடனடியாக பதவி விலக வேண்டும்.'' என்று வலியுறுத்தியிருந்தார். முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மனசாட்சி இருந்தால், 5 ஆண்டுகளுக்கு வலியுறுத்தியதைப் போல இப்போது பதவி விலக வேண்டும்.'' என்று தெரிவித்துள்ளார்.

# ஏலகிரி மலையில் விரைவில் ரோப் கார்: சுற்றுலா துறை அமைச்சர் ராஜேந்திரன் தகவல்



திருப்பத்தூர்: ஜுன்.30-

சுற்றுலாப் பயணிகளை கவர ஏலகிரியில் விரைவில் 'ரோப் கார்' அமைக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியம், ஏலகிரி மலையில் கோடை விழா நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் சிவசௌந்திரவல்லி தலைமை வகித்தார். ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் உமாமகேஸ்வரி வரவேற்றார். திருவண்ணாமலை மக்களவை உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டப்பேரவை உறுப்பினர்கள், நல்லதம்பி (திருப்பத்தூர்), தேவராஜி (ஜோலார்பேட்டை), அ.செ.வில்வநாதன் (ஆம்பூர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு அரசு சார்பில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். கோடை விழா அரங்கு அருகே வனத்துறை, மருத்துவத்துறை, வேளாண் துறை, காசநோய் தடுப்புத்துறை, சித்த மருத்துவம், மூலிகை உள்ளிட்ட அரங்குகள் அமைக்கப்பட்டு இருந்தன. இதனை பொதுமக்கள் ஆர்வமுடன் பார்த்து சென்றனர். அதேபோல, ஏலகிரி மலையில் சுற்றுலாப் பயணிகள் செல்பி எடுப்பதற்காக ஆங்காங்கே செல்பி பாயிண்ட்டுகள் அமைக்கப்பட்டு இருந்தன. இவற்றில் சுற்றுலாப் பயணிகள் ஆர்வமுடன் செல்பி எடுத்து மகிழ்ந்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷ்ரேயா குப்தா, மாவட்ட வன அலுவலர் மகேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், திருப்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் வரதராஜன், மாவட்ட சுற்றுலா அலுவலர் ஆனந்தன், ஒன்றியக்குழு உறுப்பினர் லட்சுமி செந்தில்குமார், ஜோலார்பேட்டை ஒன்றியக்குழு தலைவர் சத்யா சதீஷ்குமார், ஏலகிரி மலை ஊராட்சி மன்ற தலைவர் ராஜஸ்ரீகிரிவேலன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஏலகிரி கோடை விழாவையொட்டி பள்ளி மாணவ மாணவர்களின் பரத நாட்டியம், சிலம்பம், ஒயிலாட்டம், மயிலாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஜோலார்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் சங்கர் நன்றி கூறினார். முன்னதாக அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் ஏலகிரியில் உள்ள படகு குழாம், இயற்கை பூங்கா உள்ளிட்டவைகளை பார்வையிட்டனர்.

ஏலகிரி கோடை விழா கடந்த சில ஆண்டுகளாக நடத்தப்படாமல் தற்போதும் கோடை விழா நடைபெறுமா? என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியில் எழுந்த நிலையில், கடந்த 2 நாட்களுக்கு முன்பு இந்த ஆண்டு கோடை விழா 1 நாள் மட்டும் நடைபெறும் என்ற திடீர் அறிவிப்பு பொதுமக்களுக்கு எளிதில் சென்று சேராததால், இன்று ஒரு நாள் நடைபெற்ற ஏலகிரி கோடை விழாவுக்கு பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் பெரிய அளவில் ஆர்வம் காட்டாததால் கோடை விழா ஆட்கள் இல்லாமல் மக்கள் வரத்து குறைந்த அளவே காணப்பட்டது.

கோடை விழாவிற்கு வருகை தந்த, அமைச்சர் பெருமக்கள், மக்கள் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை ஏலகிரி மலைவாழ் மக்கள் தங்களது பாரம்பரிய நடனம் ஆடியும், தப்பாட்டம், மயிலாட்டம், கரகாட்டம் போன்ற பாரம்பரிய முறைப்படி வரவேற்றனர்.

# அகமதாபாத் விமான விபத்து எதிரொலி ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் விமான விபத்து, மீட்பு பணி ஒத்திகை

சென்னை, ஜூன்.30-

சென்னை, டெல்லி, மும்பை, கொல்கத்தா, ஐதராபாத், பெங்களூரு, கொச்சி உள்ளிட்ட சர்வதேச விமான நிலையங்களில், விமான சேவைகள் இயக்கங்களில் பாதுகாப்பு நலன் கருதி, ஒவ்வொரு ஆண்டும் இந்த விமான நிலையங்களில் தனித்தனியே, இந்திய விமான நிலைய ஆணையம் மூலம், பாதுகாப்பு ஒத்திகைகள் நடத்தப்படும். இந்த பாதுகாப்பு ஒத்திகை ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு விதமாக, விமான நிலையங்களில் நடத்தப்படும். முதல் ஆண்டு நடத்தப்படும் பாதுகாப்பு ஒத்திகையில், சுமார் 25 சதவீதம் அளவில் சிறிய அளவில் நடத்தப்படும். இரண்டாவது ஆண்டு 50 சதவீதம் அளவில் ஓரளவு பெரிய அளவில், நடத்தப்படும். மூன்றாவது ஆண்டில் 100 சதவீதம் முழு பெரிய அளவில் பாதுகாப்பு ஒத்திகை நடத்தப்படும். இந்த பாதுகாப்பு ஒத்திகைகள், வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில், வெவ்வேறு தேதிகளில் வெவ்வேறு விமான நிலையங்களில் நடத்தப்படும். இந்த ஆண்டு ஜூன் 12ம் தேதி, குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் மிகப்பெரிய விமான விபத்து காரணமாக, இந்த பாதுகாப்பு ஒத்திகைகளை முன்னதாக, உடனடியாக வெவ்வேறு நாட்களில் இந்தியாவில் உள்ள முக்கிய விமானங்களில் நடத்தும்படி இந்திய விமான நிலைய ஆணையம் மற்றும் டெல்லியில் உள்ள டைரக்டர் ஜெனரல் ஆப் சிவில் ஏவியேஷன் எனப்படும் விமான பாதுகாப்புத்துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதை தொடர்ந்து, முதலாவதாக சென்னை விமான நிலையத்தில் இந்த பாதுகாப்பு ஒத்திகை நேற்று நடந்தது. 100 சதவீதம் முழு அளவில் நடந்த பாதுகாப்பு ஒத்திகையில், சென்னை விமான நிலையம் சார்புடைய அனைத்து துறைகளைச் சேர்ந்தவர்கள், காவல் துறை போக்கு வரத்து காவல்துறை, மருத்து வத்துறை, தீயணைப்பு துறை, அதிரடிப்படை உள்பட சுமார் 500க்கும்





மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். சென்னை விமான நிலையத்தில் வழக்கமாக விமான நிலையத்தின் ஓடுபாதை அருகே, அல்லது பழைய விமான நிலைய பகுதிகளில் மட்டுமே இதேபோன்ற பாதுகாப்பு ஒத்திகை நடப்பது வழக்கம்.

ஆனால் இந்த ஆண்டு முதல் முறையாக, விமான நிலையத்திற்கு வெளியே, அருகே உள்ள ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையம் ஓடிஏ மைதானத்தில் நடந்தது. நேற்று மாலை சென்னை விமான நிலையத்தில் இருந்து வர்த்தக விமானம் ஒன்று, 50 பயணிகள், 5 விமான ஊழியர்களுடன் புறப்பட்டு, அடுத்த சில நிமிடங்களில், பரங்கிமலை ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தின் ஓடை அருகே மோதி விபத்துக்குள்ளானதாக, சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் அவசரமாக தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து தீயணைப்பு குழுவினர், மருத்துவக் குழுவினர், 14 ஆம்புலன்ஸ் வாகனங்கள், அதிரடிப்படை வீரர்கள், சென்னை மாநகர போலீசார், மத்திய தொழில் பாதுகாப்பு படையினர், பிசிஏஎஸ் எனப்படும் விமான பாதுகாப்பு துறையினர் அதிரடிப்படை வீரர்கள் உள்ளிட்ட அனைத்து பிரிவினரும் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, விமான நிலைய தீயணைப்பு வண்டிகள் மட்டுமின்றி, தமிழக அரசின் தீயணைப்பு வண்டிகள் போன்றவைகளும் வந்து, தீயை உடனடியாக அனைத்து, காயம் அடைந்தவ ர்களை மீட்டு, மருத்துவ உதவிகள் செய்யப்படுவது போலவும், பிசிஏஎஸ், சிஐஎஸ்எப் போன்றவர்கள் உடனடி புலன் விசாரணை மேற்கொண்டு, விபத்து எவ்வாறு நடந்தது, சதி வேலை காரணமா, இல்லை விமான த்தில் தொழில் நுட்பக் கோளாறா, விமானிகளின் கவன குறைவா என்று பல்வேறு கோணங்களில் விசார ணைகள் நடத்துவது போலவும், ஒத்திகைகள் நடந்தன.

இந்த ஒத்திகைக்கு பயன்படுத்துவதற்காக, பழைய கண்டம் செய்யப்பட்ட விமானத்தின் உதிரி பாகங்களை இணைத்து, விமானம் போலவே உருவாக்கி, அது தீப்பிடித்து எரிவது போல் அமைக்கப்பட்டிருந்தது.

அந்த காட்சியை பார்த்த போது உண்மையிலேயே விமானம் ஒன்று விழுந்து விபத்துக்குள்ளாகி தீப்பிடித்து எரிவது போல் இருந்தது. இந்த மிகப்பெரிய பாதுகாப்பு ஒத்திகை சுமார் ஒரு மணி நேரம் நடந்தது. அதன்பின்பு, நடந்தது அனைத்தும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஒத்திகை தான். எனவே யாரும் அச்சப்பட வேண்டியது இல்லை என்று சென்னை விமான நிலைய அதிகாரிகள் அதிகாரப்பூர்வமாக அறிவித்தனர்.

* அடுத்த ஆண்டும் ஒத்திகை

சென்னை விமான நிலைய இயக்குனர் சி.வி.தீபக், சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்த ஒத்திகை வழக்கமாக நடப்பது தான். ஆனால் அகமதாபாத் விமான விபத்துக்கு பின்பு, ஒத்திகையை பெரிய அளவில் நடத்தும்படி இந்திய விமான போக்கு வரத்து அமைச்சகம் அறிவுறுத்தியது. அதன்படி இன்று (நேற்று) இந்த ஒத்திகை சென்னை விமான நிலையம் அருகே உள்ள ராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் நடத்தப்பட்டது.

இந்த ஒத்திகைக்கு இந்திய விமான நிலைய ஆணையத்தின், அனைத்து பிரிவை சேர்ந்தவர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு அதிகாரிகள், தமிழ்நாடு அரசின் அனைத்து பிரிவை சேர்ந்தவர்கள் முழு ஒத்துழைப்பு அளித்தனர். இந்த ஒத்திகை வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. இந்த ஒத்திகை நிகழ்ச்சியை இந்திய விமான நிலைய ஆணைய உயர் அதிகாரிகள், மற்றும் தன்னார்வல நிபுணர்கள், ஆய்வு செய்துள்ளனர். அவர்கள் ஒத்திகை குறித்து அறிக்கைகளை அளிப்பார்கள். அதை பரிசீலனை செய்து, அடுத்த ஆண்டு நடக்கும் ஒத்திகையில், சற்று மாற்றங்கள் செய்யப்பட உள்ளன. இவ்வாறு செய்து தீபக் கூறினார். இதுபோன்ற மிகப்பெரிய அளவில் 100 சதவீத ஒத்திகை, ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் என்ப தால் சென்னை விமான நிலையத்தில் மிகப்பெரிய அளவிலான ஒத்திகை வருகிற 2028ம் ஆண்டு நடைபெறுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று சென்னை விமான நிலைய அதிகாரிகள் தரப்பில் கூறுகின்றனர்.

# ரூ.51,000 கோடியை தானமாக வழங்கிய வாரன் பபெட்

அமெரிக்கா, ஜூன்.30-

அமெரிக்க தொழிலதிபர் வாரன் பபெட், 5 அறக்கட்டளைகளுக்கு ரூ.51,000 கோடியை தானமாக வழங்கி உள்ளார்.



உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரர்களில், அமெரிக்க தொழிலதிபர் வாரன் பபெட் 5வது இடத்தில் உள்ளார். 94 வயதாகும் அவர் பங்கு சந்தையின் பிதாமகன் என்று அழைக்கப்படுகிறார். அவரது மொத்த சொத்து மதிப்பு ரூ.12.97 லட்சம் கோடி ஆகும்.

கடந்த 2006ம் ஆண்டு முதல் வாரன் பபெட் தனது சொத்துகளை பல்வேறு தன்னார்வ தொண்டு அமைப்புகளுக்கு தானமாக வழங்கி வருகிறார். இந்த வரிசையில் தற்போது அவர், 5 அறக்கட்டளைகளுக்கு ரூ.51,000 கோடியை தானமாக வழங்கியிருக்கிறார்.

இதன்படி கேட்ஸ் அறக்கட்டளை, சூசன் தாம்சன் பபெட் அறக்கட்டளை, ஷெர்வுட் அறக்கட்டளை, ஹோவார்ட் பபெட் அறக்கட்டளை, நோவோ அறக்கட்டளை ஆகிய 5 அறக்கட்டளைகளுக்கு நாளை ரூ.51,000 கோடி மதிப்புள்ள பங்குகள் வழங்கப்பட உள்ளன. இதில் கேட்ஸ் அறக்கட்டளையை தவிர்த்து இதர 4 அறக்கட்டளைகளை வாரன் பபெட்டின் குடும்பத்தினர் நிர்வகிக்கின்றனர்.

கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் வாரன் பபெட் ரூ.5.1 லட்சம் கோடியை தானமாக வழங்கியிருக்கிறார். தற்போது ரூ.51,000 கோடியை வழங்கியிருப்பதன் மூலம் உலகின் மிகப்பெரிய கோடீஸ்வரர்கள் பட்டியலில் 5வது இடத்தில் இருந்து 6வது இடத்துக்கு அவர் இறங்கி உள்ளார்.

வாரன் பபெட்டின் மூத்த மகள் சுசிக்கு தற்போது 71 வயதாகிறது. அவரது 2வது மகன் ஹோவார்டு 70 வயதை எட்டியுள்ளார். 3வது மகன் பீட்டருக்கு 67 வயதாகிறது. இவர்கள் 3 பேரும் பல்வேறு அறக்கட்டளைகளை நடத்துகின்றனர். இந்த அறக்கட்டளைகள் மூலம் உலகம் முழுவதும் கல்வி, சுகாதாரம் உட்பட பல்வேறு துறைகளில் அவர்கள் சேவை செய்து வருகின்றனர்.

வாரன் பபெட் அண்மையில் கூறும்போது, "எனது இறப்புகக்கு நாம் சம்பாதித்த சொத்துகளில் 99.5 சதவீதம் எனது குடும்பத்தினர் நடத்தும் அறக்கட்டளைகளுக்கு தானமாக வழங்கப்படும்" என்று அறிவித்தார். இது தொடர்பாக அவர் உயிலும் எழுதி வைத்திருக்கிறார்.



# தமிழகத்தில் ஜூலை 4 வரை மழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஜூன்.30-

தமிழகத்தில் ஜூலை 4ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசைக் காற்றில் நிலவும் வேக மாறுபாடு காரணமாக இன்று (ஜூன் 29) ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மேலும், சில இடங்களில் அதிகபட்சமாக மணிக்கு 50 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். நாளை முதல் ஜூலை 4ம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கோவை மாவட்டம் வால்பாறை, உபாசி, புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஆகிய இடங்களில் 4 செ.மீ., கோவை மாவட்டம் சோலையாறு, சின்கோனா, சின்னக்கல்லாறு, திண்டுக்கல் மாவட்டம் நத்தம் ஆகிய இடங்களில் 3 செ.மீ., நீலகிரி மாவட்டம் நடுவட்டம், விண்ட் வொர்த் எஸ்டேட், தேவாலா, தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளம், தேனி மாவட்டம் பெரியாறு ஆகிய இடங்களில் 2 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

தென் தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதையொட்டிய குமரிக்கடல் பகுதிகளில்அதிகபட்சமாக மணிக்கு 65 கி.மீ. வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக்கூடும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புரி கோயில் கூட்ட நெரிசல் உயிரிழப்பு: மாவட்ட எஸ்.பி, ஆட்சியர் பணியிட மாற்றம்

புரி, ஜூன்.30-

புரி ஜெகநாதர் கோயில் ரத யாத்திரையில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 3 பேர் பலியானதை தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பணியிடமாற்றம் செய்யப்பட்டனர்.



புரி ஜெகநாதர் கோயில் ரத யாத்திரை நிகழ்வில் இன்று ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 3 பேர் பலியாகினர். சுமார் 50 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடைபெற்று வரும் நிலையில், புரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வினித் அகர்வால் மற்றும் மாவட்ட ஆட்சியர் சித்தார்த்த சங்கர் ஸ்வெயின் ஆகியோரை மாநில அரசு பணியிடமாற்றம் செய்துள்ளது. இதனையடுத்து, தற்போது ஏடிஜிபியாக ஆக உள்ள பினாக் மிஸ்ரா, பூரியின் எஸ்.பியாக பதவியேற்கிறார். அதே நேரத்தில் குர்தா கலெக்டர் சஞ்சல் ராணா, புரியின் புதிய மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்கவுள்ளார். மேலும், இந்த விவகாரத்தில் டிசிபி பிஷ்ணு பதி மற்றும் கமாண்டன்ட் அஜய் பதி ஆகிய இரண்டு காவல்துறை அதிகாரிகளையும் பணியிடைநீக்கம் செய்ததாக ஒடிசா முதல்வர் அறிவித்துள்ளார். ரூ.25 லட்சம் நிதி உதவி: புரி ஜெகநாதர் கோயில் ரத யாத்திரையில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.25 லட்சம் நிதி உதவி வழங்கப்படும் என்றும் மாநில அரசு அறிவித்துள்ளது.

நடந்தது என்ன? ஒடிசாவின் கடற்கரை நகரான புரியில் உலகப் புகழ் பெற்ற ஜெகநாதர் கோயில் அமைந்துள்ளது. புரி ஜெகந்நாதர் கோயிலுக்கு நாள்தோறும் 50,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தருகின்றனர். அதுவும் புரி ஜெகநாதர் கோயில் ரத யாத்திரைக்காக லட்சக்கணக்கானோர் குவிவதுண்டு. வழக்கம்போல் இந்த ஆண்டும் ரத யாத்திரைக்காக புரி நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

இந்நிலையில், புரி ஜெகநாதர் கோயில் ரத யாத்திரை நிகழ்வில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 3 பேர் பலியாகினர். சுமார் 50 பேர் காயமடைந்தனர். ஸ்ரீ குந்திச்சா கோயில் அருகே இன்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 4.30 மணியளவில் இந்த துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இது குறித்து புரி மாவட்ட ஆட்சியர் சித்தார்த் ஸ்வெயின் கூறுகையில், "ரத யாத்திரையை ஒட்டி அதிகாலை 4 முதல் 4.30 மணிக்குள் ஸ்ரீ குந்திச்சா கோயில் அருகே, கூட்டம் குவிந்தது. எதிர்பாராத வகையில் கூட்டம் திரண்டதால் நெரிசலில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்கள் ப்ரவிதா தாஸ் (52), பிரேம் கந்தா (52), பசந்தி சாஹூ (42) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த நெரிசல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. கூட்ட மேலாண்மையில் ஏதேனும் குறைபாடு இருந்ததா என்ற கோணத்தில் விசாரணை நடக்கிறது." என்றார்.

மன்னிப்பு கோரிய முதல்வர்: இந்த விபத்து குறித்து ஒடிசா முதல்வர் சரண் மாஞ்சி வெளியிட்ட இரங்கல் செய்தியில், "பக்தர்கள் மத்தியில் மஹாபிரபுவையும், சாரதாபாலியையும் காண வேண்டி ஏற்பட்ட அதீத ஆர்வத்தால், துரதிர்ஷ்டவசமாக கூட்ட நெரிசல் ஏற்பட்டுள்ளது. இந்த விஷயத்துக்காக நானும், எனது அரசாங்கமும் ஜெகநாதர் பக்தர்களிடம் மன்னிப்பு கோருகிறோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஜார்க்கண்ட்: ஜாம்ஷெட்பூரில் வெள்ளத்தில் சிக்கிய பள்ளியில் இருந்து 162 குழந்தைகள் மீட்பு

ஜாம்ஷெட்பூர், ஜூன்.30-

கனமழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக ஜார்க்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்பூரில் உள்ள கோவாலி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட லவ் குஷ் குடியிருப்புப் பள்ளியில் சிக்கித் தவித்த 162 குழந்தைகளை காவல்துறையினர் துரிதமாக செயல்பட்டு மீட்டனர்.

இதுகுறித்து ஜாம் ஷெட்பூர் காவல்துறை வெளியிட்ட எக்ஸ் பதிவில், "கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக கோவாலி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட லவ் குஷ் குடியிருப்புப் பள்ளியில் சிக்கித் தவித்த 162 குழந்தைகளை ஜாம்ஷெட்பூர் காவல்துறையினர் வெற்றிகரமாக மீட்டு அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர்." என்று தெரிவித்துள்ளது.



இதுகுறித்து பேசிய காவல்துறை கண்காணிப்பாளர் ரிஷபா கார்க், "கனமழை காரணமாக பள்ளி வளாகம் வெள்ளத்தில் மூழ்கியதால், லவ் குஷ் குடியிருப்புப் பள்ளியைச் சேர்ந்த 162 மாணவர்கள் சிக்கியுள்ளதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது. பள்ளி கட்டிடம் நீரில் மூழ்கியதால், ஆசிரியர்கள் அனைத்து மாணவர்களையும் மேல் தளத்துக்கு மாற்றினர், அங்கு அவர்கள் இரவு முழுவதும் இருந்தனர். இன்று அதிகாலை 5.30 மணியளவில் தகவல் கிடைத்ததும், காவல்துறை அதிகாரிகள் மற்றும் தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கிராம மக்களின் உதவியுடன் மாணவர்களை மீட்டனர். மீட்புப் பணிக்காக படகுகள் பயன்படுத்தப்பட்டது." என்று கூறினார்

இந்திய வானிலை ஆய்வு மையம் கணிப்பு: இந்தச் சூழலில், ஜார்க்கண்ட் முழுவதும் தொடர்ந்து பரவலாக மழை பெய்யும் என்றும், அடுத்த இரண்டு நாட்களுக்கு தெற்கு மற்றும் அருகிலுள்ள மத்திய மாவட்டங்களில் மிக கனமழை பெய்யும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

ராஞ்சியில் உள்ள வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், "மாநிலம் முழுவதும் பருவமழை தீவிரமாகி உள்ளது. ஜூலை 5ம் தேதி வரை பெரும்பாலான இடங்களில் லேசானது முதல் மிதமானது வரை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜூலை 1 மற்றும் 2ம் தேதிகளில் வடமேற்கு மற்றும் வடமத்திய ஜார்க்கண்டின் அருகிலுள்ள பகுதிகளில் மிக கனமழை பெய்யும். வடகிழக்கின் சில மாவட்டங்களில் கனமழை பெய்யும். இந்த பருவமழை காலத்தில் இதுவரை ஜார்க்கண்ட் மாநிலத்தில் இயல்பை விட 81% அதிக மழை பெய்துள்ளது. ராஞ்சி மாவட்டத்தில் 198% அதிகப்படியான மழை பதிவாகியுள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எம்சிஏடி திட்டத்தின் கீழ் விவசாயத்துக்கு பயன்படுத்தும் நீருக்கு கட்டணம் விதிக்கப்படாது: ஒன்றிய அரசு விளக்கம்

சென்னை, ஜூன்.30-

எம்.சி.ஏ.டி திட்டத்தின் கீழ் விவசாயத்திற்கு பயன்படுத்தும் நீருக்கான கட்டணம் விதிக்கப்படாது என ஒன்றிய அரசு விளக்கம் அளித்துள்ளது. இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பிரதான் மந்திரி கிருஷி சிஞ்சாய் திட்டத்தின் கீழ் வர கூடிய கட்டளை பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மையை நவீனமயமாக்குதல் என்ற (எம்சிஏடி) திட்டத்துடன் தொடர்புடைய அம்சம் குறித்து செய்தி வந்துள்ளன.

நீர்ப்பாசன செயல்திறனை மேம்படுத்துதல், நீர் விநியோகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக அழுத்தப்பட்ட குழாய் கட்டமைப் புகளை ஏற்படுத்துதல், பொருட்களின் இணைய சாதனங்கள், எஸ்சிஏடிஏ அமைப்புகள் போன்ற நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதை ஊக்குவித்தல் ஆகியவற்றை இந்த முயற்சி நோக்கமாக கொண்டுள்ளது. இந்த முன்னோடி திட்டத்தின் கீழ், நீர் பயன்பாட்டிற்காக விவசாயிகள் மீது பயன்பாட்டுக் கட்டணங்களை விதிக்க வேண்டிய அவசியமில்லை.

இது தொடர்பாக ஒன்றிய அரசு எந்த உத்தரவும் பிறப்பிக்க வில்லை. சமீபத்தில் நடந்த நிருபர்கள் சந்திப்பின் போது, இந்த விஷயம் ஊடகத்தினரால் பலமுறை எழுப்பப்பட்டது. இது குறித்து ஜல்சக்தித் துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீல் தெளிவுபடுத்தினார். மேலும், 'விவசாயம்' மற்றும் 'நீர்' இரண்டும் இந்திய அரசியலமைப்பின் கீழ் மாநிலப் பிரிவுகள் ஆகும். அதன்படி, நீர் பயனர் சங்கங்கள் அல்லது இந்த திட்டத்தின் பயனாளிகளிடமிருந்து பயனர் கட்டணங்களை வசூலிப்பது தொடர்பான எந்தவொரு முடிவும் இந்த திட்டத்தை செயல்படுத்தும் அந்தந்த மாநில அரசுகளிடம் மட்டுமே இருக்கும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# பிரபல நடிகையின் முத்த மழையில் நனைந்த ஏ.ஆர். ரஹ்மான்

பாலிவுட் சீனியர் நடிகை ரேகா (70) நடிப்பில் கடந்த 1981ல் திரைக்கு வந்த இந்தி படம், 'உம்ரா ஜான்'. இப்படம் மீண்டும் ரீரிலீஸ் செய்யப்படும் நிலையில், மும்பையில் திரை பிரபலங்களுக்கான பிரீமியர் காட்சி திரையிடப்பட்டது. ஆமிர் கான், ஹேமமாலினி, தபு, அனில் கபூர் உள்பட பலர் படத்தை பார்த்து ரசித்தனர். முன்னதாக சிவப்புக்கம்பள வரவேற்பின் போது, படம் பார்க்க வந்திருவர்களை புன்னகையுடன் வரவேற்று மகிழ்ந்த ரேகா, அவர்களை இறுக கட்டியடிணைத்து நடனம் ஆடினார். திடீரென்று சிலருக்கு முத்தம் கொடுத்து அசத்தினார்.

அனில் கபூரை கட்டியணைத்த அவர், தனது சிக்னேச்சர் ஸ்டெப்ஸை வெளிப்படுத்தி நடனமாடியது ரசிகர்களை பெரிதும் கவர்ந்தது. அப்போது ஏ.ஆர். ரஹ்மான் வந்தபோது ஓடிச்சென்று வரவேற்ற ரேகா, அவரை இறுக கட்டியணைத்தார். தன்னுடைய அன்பை வெளிப்படுத்துகின்ற விதமாக கன்னத்தில் முத்த மழை பொழிந்தார். அவரது முகத்தை பிடித்து கொஞ்சினார். அவரது இச்செயலை கண்டு மகிழ்ந்த ஏ.ஆர்.ரஹ்மான், தனது செல்போனில் இக்காட்சியை செல்பி எடுத்து சோஷியல் மீடியா வில் பதிவிட்டார். தற்போது அந்த போட்டோக்களும், வீடியோவும் வைரலாகி வருகிறது.



# விஜய் சேதுபதியின் 'தலைவன் தலைவி' ரிலீஸ் தேதி அறிவிப்பு

விஜய் சேதுபதி நடித்துள்ள 'தலைவன் தலைவி' படத்தின் வெளியீட்டு தேதியை படக்குழு அறிவித்துள்ளது.

பாண்டிராஜ் இயக்கத்தில் விஜய் சேதுபதி, நித்யா மேனன், யோகி பாபு, ஆர்.கே.சுரேஷ், செம்பியன் வினோத் உள்ளிட்ட பலர் நடித்துள்ள படம் 'தலைவன் தலைவி'. இதன் படப்பிடிப்பு முடிவுற்று, இறுதிகட்டப் பணிகளில் தீவிரம் காட்டி வந்தது படக்குழு. இப்படத்தினை சத்யஜோதி நிறுவனம் தயாரித்திருக்கிறது.

தற்போது ஜூலை 25ம் தேதி 'தலைவன் தலைவி' வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது. இதற்காக வெளியிடப்பட்டுள்ள வீடியோவில், இப்படத்தில் யாரெல்லாம் நடித்துள்ளார்கள் என்பதை அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

'தலைவன் தலைவி' படத்தின் ஒளிப்பதிவாளராக சுகுமார், இசையமைப்பாளராக சந்தோஷ் நாராயணன் ஆகியோர் பணிபுரிந்துள்ளனர். இப்படத்தின் இசை வெளியீட்டு விழாவினை விரைவில் பிரம்மாண்டமாக நடத்தி, விளம்பரப்படுத்தும் பணிகளைத் தொடங்க படக்குழு திட்டமிட்டு இருக்கிறது.



# நடிகை ஷெஃபாலி ஜரிவாலா திடீர் மரணம்: போலீஸ் தீவிர விசாரணை

இந்தி டி.வி நிகழ்ச்சிகளின் மூலம் பிரபலமானவர், இந்தி நடிகை ஷெஃபாலி ஜரிவாலா. நேற்று அவருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டதை தொடர்ந்து அவரது கணவரும், இந்தி நடிகருமான பராக் தியாகி, மும்பை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஷெஃபாலி ஜரிவாலாவை பரிசோதித்த டாக்டர், வரும் வழியிலேயே மரணம் அடைந்து விட்டதாக தெரிவித்தார். இதைதொடர்ந்து மும்பை கூப்பர் மருத்துவமனைக்கு உடற்கூறு ஆய்வுக்காக அவரது உடல் கொண்டு செல்லப்பட்டது.

அந்தேரியில் இருக்கும் ஷெஃபாலி ஜரிவாலாவின் வீட்டுக்கு சென்ற மும்பை போலீசார், இது ஒரு சந்தேக மரணம் என்ற கோணத்தில் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். 2002ல் 'காந்தா லஹா' என்ற இசை ஆல்பத்தின் மூலம் கவனத்தை ஈர்த்திருந்த ஷெஃபாலி ஜரிவாலா, தொடர்ந்து 'முஜ்சே ஷாதி கரோகி' என்ற இந்தி படத்தில் சல்மான்கானுடன் நடித்தார். 2019ல் 'பேபி கம் நா' என்ற வெப்தொடரில் நடித்தார். ஏராளமான நடன நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார். இந்நிலையில், 42 வயதான அவர் திடீரென்று மரணம் அடைந்தது பாலிவுட்டில் பலத்த சோகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.



# கண்ணப்பா சினிமா விமர்சனம்:

பால்யம் முதல் இறை நம்பிக்கையற்ற நாத்திகராக இருக்கிறார் வேடுவ குலத்தில் பிறந்த திண்ணன் (விஷ்ணு மன்சு). அவர் வசிக்கும் உடுமூரில் (இன்றைய காளஹஸ்தி) ஐந்து ஆதிக்குடிகள் வசிக்கின்றன.

அங்குள்ள மலையில் சிவபெருமான் வாயுலிங்கமாக அருள்பாலித்து வருகிறார். அந்த லிங்கத்தை திண்ணன் வெறும் கல் என்கிறான். ஆனால், அதன் ஆற்றலை அறிந்து அதைக் கவர்ந்து செல்ல, காளாமுகி என்கிற இனக்குழுவின் தலைவன் (அர்பித் ரங்கா) உடுமூர் மீது படையெடுத்து வருகிறான். இந்த நேரத்தில் தன்னுடைய காதலியை வேறொருவனுக்கு விட்டுக்கொடுக்க மறுத்து சண்டையிட்ட திண்ணனை, குடியை விட்டுத் தள்ளி வைக்கிறார் அவருடைய தந்தையும் வேடுவக் குலத் தலைவருமான நடநாதர் (சரத்குமார்). திண்ணன் இல்லாத நேரத்தில் படையெடுத்து வந்த காளா முகி, நடநாதரைக் கொன்றுவிடுகிறான். பிறகு காளா முகியை திண்ணன் எப்படி அழித் தார்? நாத்திகராக இருந்த அவர், சிவபக்தராக எப்படி, எதனால் மாறினார் என்பது கதை. 63 நாயன்மார்களில் ஒருவரான கண்ணப்ப நாயனாரின் வாழ்க்கைக் கதையை, திரைக்கதையின் சுவாரஸியத்துக்காக தேவையான அளவு கற்பனையும் கலந்து மிரட்டலான திரைக் காவியமாகப் படைத்திருக்கிறது இப்படக்குழு. முதலில் பாராட்ட வேண்டிய தொழில்நுட்ப அம்சம் 'புரொடக்ஷன் டிசைன்' (சின்னா). கிராஃபிக்ஸ், விஷுவல் எஃபெக்ட்ஸ் ஆகியவற்றை அதிகம் நம்பாமல், ஆதிக் குடிகளின் வாழ்க்கையை அசல் போல் படைத்துக்காட்ட, ஆயுதங்கள் வடிவமைப்பு உள்ளிட்ட கலை இயக்கம், ஆடைகள், ஒப்பனை ஆகியவற்றில் நாம் அறிந்திராத காலகட்டத்தை உருவாக்கி அதில் நம்பகத் தன்மையைக் கொண்டுவந்து அசத்தியிருக்கிறார்கள். திண்ணனாக நடித்திருக்கும் விஷ்ணு மன்சு, அவரது கதாபாத்திரத்துக்காக உடலை செதுக்கி, நடிப்பிலும் உயர்ந்து நிற்கிறார். அதேபோல அவரே கதை, திரைக்கதையையும் எழுதியிருக்கிறார். வாயு லிங்கத்துக்கு பூஜை செய்யும் மகாதேவ சாஸ்திரி (மோகன் பாபு), ருத்ரனாக வந்து சிவசக்தியை உணர வைக்கும் பிரபாஸ், அர்ஜுனனுடன் மோதும் கிராதாவாக வரும் மோகன்லால், திண்ணனின் காதலியாக வரும் ப்ரீத்தி முகுந்தன், திண்ணன் கண்ணப்பராக உருவெடுத்தக் கதையைக் கூறும் சிவபெருமான் பார்வதி இணையாக வரும் அக்ஷய் குமார் காஜல் அகர்வால் என ஒவ்வொரு முக்கியக் கதாபாத்திரத்தின் திரை வெளியையும் திரைக்கதையின் சுவாரஸியத்துக்கும் திருப்பங்களுக்கும் வலுகூட்ட கச்சிதமாகப் பொருத்தியிருக்கிறார். தமிழ் பதிப்புக்கான வசனத்தை எழுதிய ஷெசாங் வெண்ணலகாண்டியின் பங்களிப்பு அபாரம்! முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருப்பவர்கள் மட்டுமல்ல, துணைக் கதாபாத்திரங்களில் வருபவர்களும் நிறைவான பங்களிப்பை வழங்கியிருக்கிறார்கள். ஆதிக் குடிகள் வாழும் உடுமூராக சுவிட்சர்லாந்தின் நிலப்பரப்புகளை பிரம்மாண்ட காட்சிமொழியில் கொண்டுவந்துள்ள ஷெல்டன்ஷாவின் ஒளிப்பதிவும் ஸ்டீபன் தேவஸியின் இசையும் படத்துக்கு பெரும் பலம்.

கண்ணப்ப நாயனாரின் வரலாற்றை அறிந்த பக்தர்களுக்கு பரவசத்தையும் அவரைப் பற்றி அறிந்திராதவர்களுக்கு உணர்வூட்டும் திரை அனுபவத்தையும் தரும் பிரம்மாண்ட உருவாக்கத்துடன் கவர்கிறார் இந்தக் கண்ணப்பர்.



# டி20யில் முதல் சதம் விளாசிய ஸ்மிருதி மந்தனா: இங்கிலாந்துக்கு எதிராக அபாரம்

டி20 கிரிக்கெட்டில் தனது முதல் சதத்தை பதிவு செய்துள்ளார் இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் கேப்டன் ஸ்மிருதி மந்தனா. 62 பந்துகளில் 112 ரன்கள் அவர் எடுத்தார்.


இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. இதில் டி20 தொடரின் முதல் ஆட்டம் இன்று நாட்டிங்காமில் தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச முடிவு செய்தது.

இந்திய அணிக்காக ஷெபாலி மற்றும் கேப்டன் ஸ்மிருதி மந்தனா இணைந்து இன்னிங்ஸை தொடங்கினர். முதல் விக்கெட்டுக்கு 77 ரன்கள் சேர்த்தனர். ஷெபாலி 22 பந்துகளில் 20 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த ஹர்லீன் தியோல் உடன் 94 ரன்கள் கூட்டணி அமைத்தார் ஸ்மிருதி. ஹர்லீன், 23 பந்துகளில் 43 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

51 பந்துகளில் சதம்: இன்னிங்ஸை அதிரடியாக அணுகிய ஸ்மிருதி 51 பந்துகளில் சதம் விளாசினார். இதன் மூலம் டி20 கிரிக்கெட் பார்மெட்டில் ஹர்மன்ப்ரீத்துக்கு அடுத்ததாக சதம் விளாசிய 2வது இந்திய வீராங்கனை என்ற சாதனையை ஸ்மிருதி படைத்துள்ளார். மகளிர் டி20 கிரிக்கெட்டில் குறைந்த பந்துகளில் எடுக்கப்பட்ட சதங்களில் இது 4வது இடத்தில் உள்ளது. 62 பந்துகளில் 112 ரன்கள் எடுத்து ஸ்மிருதி ஆட்டமிழந்தார். 15 ஃபோர்கள் மற்றும் 3 சிக்ஸர்களை அவர் விளாசி இருந்தார்.

ரிச்சா கோஷ் 12, ஜெமிமா 0 ரன்கள் எடுத்து வெளியேறினர். அமஞ்ஜோத் 3, தீப்தி 7 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். 20 ஓவர்களில் இந்திய அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 210 ரன்கள் எடுத்தது. இங்கிலாந்து தரப்பில் லாரன் பெல் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். அர்லட் மற்றும் சோஃபி தலா 1 விக்கெட் வீழ்த்தினர். 211 ரன்கள் என்ற இலக்கை இங்கிலாந்து விரட்டுகிறது.

# 'நான் ஏன் கிளப் உலகக் கோப்பை தொடரில் விளையாடவில்லை என்றால்...' ரொனால்டோ ஓபன் டாக்



நடப்பு ஃபிபா கிளப் உலகக் கோப்பை தொடரில் தான் பங்கேற்காதது ஏன் என்பதை கால்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ வெளிப்படையாக தெரிவித்துள்ளார். கடந்த 2022 முதல் கிளப் அளவிலான கால்பந்து போட்டிகளில் சவுதி அரேபியாவின் அல்நசர் அணிக்காக விளையாடி வருகிறார் 40 வயதான ரொனால்டோ. அண்மையில் 2027 வரையில் விளையாடும் வகையில் அவரது ஒப்பந்தத்தை அந்த அணி புதுப்பித்தது. இந்நிலையில், அமெரிக்காவில் நடைபெறும் நடப்பு ஃபிபா கிளப் உலகக் கோப்பை தொடரில் பங்கேற்காதது குறித்து ரொனால்டோ பேசியுள்ளார்.


அல்நசர் கிளப் அணி இந்தத் தொடரில் பங்கேற்க தகுதி பெறவில்லை. இருப்பினும் ரொனால்டோ இந்த தொடரில் பங்கேற்க ஃபிபா அழைப்பு விடுத்ததாக தகவல் வெளியானது. இதே தொடரில் இன்டர் மியாமி அணிக்காக மெஸ்ஸி விளையாடி வருகிறார்.

"கிளப் உலகக் கோப்பை தொடரில் விளையாட எனக்கு சில ஆஃபர்கள் வந்தன. ஆனால், அது அர்த்தமற்றது என நான் கருதினேன். அதனால் சிறந்த முறையில் ஓய்வு எடுக்க முடிவு செய்தேன். ஏனெனில், இந்த சீசன் மிகவும் பெரியது. உலகக் கோப்பை தொடரும் நடைபெற உள்ளது. இதற்கு சிறந்த முறையில் தயாராக ஓய்வு அவசியம்.

நான் எனது கிளப் அணிக்காக மட்டுமல்லாது தேசிய அணிக்காகவும் விளையாட விரும்பினேன். அதனால் தான் நேஷன்ஸ் லீக் தொடரிலும் விளையாடினேன். வேறு எதற்கும் நான் செவிகொடுக்கவில்லை. அல்நசர் அணிக்காக பிரதான கோப்பையை வெல்ல வேண்டும் என விரும்புகிறேன். இது நான் நேசிக்கின்ற ஒரு அணி. அதனால் தான் இப்போது எனது ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. நிச்சயம் நான் சவுதி சாம்பியன் ஆவேன்" என ரொனால்டோ கூறியுள்ளார். இதை வீடியோ வடிவில் சமூக வலைதளத்தில் அல்நசர் அணி பகிர்ந்துள்ளது.

அல்நசர் அணிக்காக 105 போட்டிகளில் 93 கோல்கள் பதிவு செய்துள்ளார் ரொனால்டோ. இதுவரை மொத்தம் 932 கோல்களை ரொனால்டோ பதிவு செய்துள்ளார். இதில் 138 கோல்கள் போர்ச்சுகல் அணிக்காகவும், 794 கோல்கள் கிளப் அணிக்காகவும் பதிவு செய்துள்ளார். 1000 கோல்களை பதிவு செய்வது அவரது இலக்காக உள்ளது.

# மறக்குமா நெஞ்சம் : இந்தியாவின் அசாத்திய வெற்றியும்; டி20 உலகக் கோப்பை பட்டமும் OTD



கடந்த ஆண்டு இதே நாளில் மேற்கு இந்தியத் தீவுகளில் நடைபெற்ற ஐசிசி டி20 உலகக் கோப்பை தொடரின் இறுதிப் போட்டியில் தென் ஆப்பிரிக்காவை 7 ரன்களில் வீழ்த்தி த்ரில் வெற்றி பெற்று அசத்தியது இந்திய கிரிக்கெட் அணி. ஆட்டத்தில் வெற்றி சாத்தியமில்லை என்ற தருணத்தில் இருந்து அதை அசாத்திய வெற்றியாக இந்தியா மாற்றி இருந்தது.

அது இந்திய அணிக்கு 13 ஆண்டுகளுக்கு பிறகு கிடைத்த ஐசிசி கோப்பையாக அமைந்தது. அந்தப் போட்டியின் வெற்றித் தருணங்களை கொஞ்சம் ரீவைண்ட் செய்வோம். ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி வாகை சூடியது எப்படி என்பதை பார்ப்போம்.

இது இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிகளில் ஒன்று என சொல்லி அப்படியே கடந்து சென்று விட முடியாது. பார்படோஸின் பிரிட்ஜ்டவுனில் உள்ள கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் கடந்த ஆண்டு இதே நாளான ஜூன் 29ம் தேதி இந்த இறுதிப் போட்டி நடைபெற்றது. 2007ல் இளம் வீரராக டி20 உலகக் கோப்பை பட்டம் வென்ற ரோஹித், 17 ஆண்டுகளுக்கு பிறகு அணியின் கேப்டனாக சாம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

தொடர்ந்து பல ஆண்டுகளாக ஐசிசி தொடர்களின் இறுதிப் போட்டி, அரையிறுதி என இந்திய அணிக்கும், ரசிகர்களுக்கும் ஹார்ட்பிரேக் மற்றும் எஞ்சியது. அதனால் பார்படோஸில் இந்திய அணியின் வெற்றி மகத்தானது மற்றும் மறக்க முடியாததும் கூட. சாம்பியன் பட்டம் வென்ற அந்த தருணத்தில் இந்திய அணியின் ஜாம்பவான்களான ரோஹித்தும் கோலியும் டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தனர். அதோடு இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக அப்போது இருந்த ராகுல் திராவிடும் தனது பொறுப்பில் இருந்து விடைபெற்றார்.

இந்தியா வாகை சூடியது எப்படி? இறுதிப் போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங் தேர்வு செய்தது. ரோஹித், சூர்யகுமார் யாதவ், ரிஷப் பந்த் ஆகியோர் ஒற்றை இலக்க ரன்களில் ஆட்டமிழந்தனர். பின்னர் அக்சர் படேலும் விராட் கோலியும் இணைந்து 72 ரன்கள் கூட்டணி அமைத்தனர். அது இந்திய அணிக்கு முக்கியமானதாக அமைந்தது.

31 பந்துகளில் 47 ரன்கள் விளாசி இருந்தார் அக்சர். அவரது இன்னிங்ஸில் 4 சிக்ஸர்கள் அடங்கும். விராட் கோலி 59 பந்துகளில் 76 ரன்கள் எடுத்திருந்தார். 6 ஃபோர்கள், 2 சிக்ஸர்களை அவர் விளாசி இருந்தார். 19வது ஓவரில் கோலி ஆட்டமிழந்தார். ஷிவம் துபே, 16 பந்துகளில் 27 ரன்கள் எடுத்தார். 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 176 ரன்கள் எடுத்தது இந்தியா.

தென் ஆப்பிரிக்கா விரட்டல்: இரண்டாவது இன்னிங்ஸில் 14வது ஓவர் வரை ஆட்டத்தில் வெல்லும் வாய்ப்பு இரு அணிக்கு சமமாகவே இருந்தது. கடைசி 6 ஓவர்களில் தென் ஆப்பிரிக்க அணியின் வெற்றிக்கு 54 ரன்கள் தேவைப்பட்டது. அப்போது அக்சர் வீசிய 15வது ஓவரில் 24 ரன்கள் கொடுத்தார். கிளாசன் 23 பந்துகளில் அரை சதம் கடந்தார்.

வெற்றியை தட்டிப்பறித்த இந்தியா: கடைசி 5 ஓவர்களில் வெறும் 30 ரன்கள் மட்டுமே தென் ஆப்பிரிக்க அணியின் வெற்றிக்கு தேவைப்பட்டது. களத்தில் கிளாசன் மற்றும் மில்லர் இருந்தனர். அதனால் தென் ஆப்பிரிக்கா சுலப வெற்றி பெறும் என அனைவரும் எதிர்பார்த்தனர்.

பும்ரா வீசிய 16வது ஓவரில் வெறும் 4 ரன்கள் மட்டுமே கொடுத்தார். அடுத்த ஓவரில் கிளாசன் விக்கெட்டை கைப்பற்றினார் ஹர்திக். அதன் பின்னர் இந்திய அணியின் பந்து வீச்சாளர்களான ஹர்திக், பும்ரா, அர்ஷ்தீப் என மூவரும் சிறப்பாக பந்துவீசினர். யான்சன், டேவிட் மில்லர், ரபாடா ஆகியோரது விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

சூர்யகுமாரின் சூப்பர் கேட்ச்: கடைசி ஓவரில் தென் ஆப்பிரிக்க அணியின் வெற்றிக்கு 16 ரன்கள் தேவைப்பட்டது. அந்த ஓவரை ஹர்திக் வீசி இருந்தார். முதல் பந்தில் மில்லர் பெரிய ஷாட் ஆட முயன்று பந்தை விளாசி இருந்தார். பவுண்டரி லைனுக்கு உள்ளே வெளியே சென்று அதை கேட்ச் செய்திருந்தார் இந்திய வீரர் சூர்யகுமார் யாதவ். அது இந்திய அணியின் வெற்றியை உறுதி செய்தது. தென் ஆப்பிரிக்க அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 169 ரன்கள் மட்டுமே எடுத்தது. அதன் மூலம் இந்திய அணி 7 ரன்களில் வெற்றி பெற்றது அசத்தி இருந்தது.




## மதுரையில் எம் எம் எம் கண் பராமரிப்பு மையம் திறப்பு : கண் பரிசோதனைகளை வீடுகளுக்கே வந்து வழங்குகிறது

மதுரை, ஜூன்.30-

மதுரையில் எம் எம் எம் கண் மருத்துவமனை பராமரிப்பு மையம் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி திறந்து வைத்தார், உடன் மத்திய அரசு சட்ட ஆலோசகர் டாக்டர் பி. ராமசாமி, அண்ணா ஆப்டோமெட்ரி கல்லூரி தலைவர் பி. அண்ணாதுரை ஸ்ரீ, தலைமை நிர்வாக இயக்குனர் மற்றும் கருவிழி சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். பெர்னார்ட் ஆல்பர்ட் ராஜ்குமார், கண் மருத்துவர் டாக்டர் ஆ. பாக்ய சகாய மெர்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தென் தமிழகத்தில் முதன்முறையாக, இந்த மையம் முழுமையாக வீட்டுப் பரிசோதனைகளையும், சர்க்கரை நோயாளிகளுக்கான கண் பரிசோதனைகளையும், நவீன ஃபண்டஸ் கேமராவை வீட்டிற்கே கொண்டு வந்து மேற்கொள்கிறது.மருத்துவமனையில் நான்கு கண் மருத்துவர்கள் மற்றும் 15 உதவியாளர்கள் பணியாற்றுகின்றனர். கடந்த வருடம் தொடக்கத்திலிருந்து, 350க்கும் மேற்பட்ட கண் அறுவை சிகிச்சைகள் செய்துள்ளதுடன், 100க்கும் மேற்பட்ட சமூக கண் பரிசோதனை முகாம்களையும் மருத்துவமனை நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், சிறந்த தரம் கொண்ட இந்திய உற்பத்தி லென்ஸ்களுடன் அறுவை சிகிச்சை குறைந்த செலவில் வழங்கப்படுகின்றன. இது கிராமப்புறத்தில் வாழும் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஊசி, தையல் இனல்லாத கண்புரை சிகிச்சைகளில் நிபுணத்துவம் பெற்றது. குறைந்த செலவில் மருத்துவமனையில் தங்க வேண்டிய தேவையை தவிர்ந்து வெளிநோயாளிகளாகவே சிகிச்சை அளிக்கப்பட்டு, வீடு செல்ல வாகன ஏற்பாடும் செய்துதருகிறேம். இது கிராமப்புறத்தில் வாழும் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மதுரை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ளவர்கள் 82485 64103 என்ற எண்ணை அழைத்து வீட்டிலேயே சிகிச்சை பெறலாம்.

## உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பாதுகாப்பு சங்கம் சார்பில் குரோம்பேட்டை பச்சமலை நோக்கி நடை பயணம்

குரோம்பேட்டை.
ஜூன்.30-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு சங்கம் சார்பில் குரோம்பேட்டை TNHB குடியிருப்பு வளாகத்தில் இருந்து பச்சை மலை நோக்கி நடைப்பயணம் தலைவர் எஸ்.மோகன் அவர்களின் தலைமையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு சங்கம் நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலை நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக சென்னை உயர் நீதிமன்றம் வழக்கறிஞர் ஆர்.திருமூர்த்தி, தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் விஜயலட்சுமி ஆகியோர் கலந்துகொண்டு கொடியசைத்து துவக்கி வைத்தனர் நடைப்பயணம் TNHB குடியிருப்பு




வளாகத்தில் இருந்து புறப்பட்டு துர்கா நகர் வரை சென்று மீண்டும் TNHB வளாகத்தில் வந்தடைந்தனர்

இதில் பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சனைகளை முன்னிறுத்தி பதாகைகளுடன் கோஷமிட்டனர் இதில் டி.கே.ரங்கராஜன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் எஸ்.காசி, குழந்தை அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரியல் நிபுணர் ஆர்.திருமூர்த்தி, சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் லைன்ஸ் கிளப் கவர்னர் உதய சூரியன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இந்த நிகழ்ச்சியில் TNSF, CYC, UNITE, SCRWA, DYFI, SFI, காயிதே மில்லத் கல்லூரி, ஏ.எம்.ஜெயின் கல்லூரி, முகம்மது சதக், எஸ் ஐ வி டி கல்லூரி மாணவர்கள் பேராசிரியர்கள் நல சங்கத்தின் பொறுப்பாளர்கள் மத்திய மாநில ஓய்வூதியர்கள் தொழிற்சங்கத்தினர் மூத்த குடிமக்கள் பெண்கள் பார்வதி மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் என 1500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பேரணியாக சென்றனர் இதில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் திருவாளர்கள் மு.சி பலராமன் TNHB குடியிருப்பு நல சங்கம் தலைவர் பாலசுப்பிரமணியம் செயலாளர் கிருஷ்ணன் பொருளாளர் பாலசுப்பிரமணியம் சிவப்பிரகாசம் சதாசிவம் மாடம்பாக்கம் ஏரி பாதுகாப்பு குழு கங்காதரன் ஆகியோருக்கு சங்கத்தின் சார்பில் சால்வை அணிவித்து புத்தகம் வழங்கி கௌரவிக்கப்பட்டது பின்னர் செயலாளர் எம்.தங்கராஜ் பச்சமலை பாதுகாக்க வேண்டும் என்று தீர்மானத்தை வாசிக்கப்பட்டது. இறுதியில் அனைவருக்கும் துணிப்பை காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. பி.எஸ்.அப்பா நன்றி உரையாற்றினார்



## கொடைக்கானல் மலை கிராமத்தில் 21 கி.மீ. நடந்து சென்று ஆய்வு செய்த சுகாதார அமைச்சர் மா.சுப்பிரமணியன்

கொடைக்கானல்,
ஜூன்.30-

கொடைக்கானலில் ஆய்வு மேற்கொண்ட சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மேல்மலைப் பகுதியான கொடைக்கானல் பூம்பாறை இடையே 21 கி.மீ., சாலையில் நடைப்பயிற்சி மேற்கொண்டார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் சுகாதார த்துறை அமைச்சர் கடந்த இருதினங்களாக அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்று மருத்துவமனை, ஆரம்பர சுகாதார நிலையங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். கொடைக்கானலில் நடந்த நிகழ்ச்சியில் பழநி சுகாதார மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.21.64 கோடி மதிப்பீட்டிலான மருத்துவக்கட்டமைப்பு வசதிகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கிவைத்தார். நிகழ்ச்சியில் எம்எல்ஏ.,க்கள் இ.பெ.செந்தில்குமார், எஸ்.காந்திராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து மேல்மலைப்பகுதி மலை கிராமமான பூம்பாறையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆய்வு மேற்கொள்ள சென்றவர் திடீரென காரில் இருந்து இறங்கி ஏற்றம் இறக்கம் மிகுந்த மலைச்சாலையில் நடக்க துவங்கினார். பூம்பாறை மலைகிராமம் வரை 21 கி.மீ., நடந்தே சென்றார். பூம்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு செய்தார். இங்கு மக்களுக்கு தேவையான அடிப்படை மருந்துகள் உள்ளனவா என ஆய்வு மேற்கொண்டார். பதிவேட்டில் இருந்த சிகிச்சை பெற்று திரும்பிய நோயாளிகளின் அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு முறையாக சிகிச்சயளிக்கப்பட்டதா என கேட்டறிந்தார். டாக்டர்கள், மருத்துவ பணியாளர்கள் செயல்பாட்டை பாராட்டும் வகையில் டீ வாங்கி வரச்சொல்லி அவர்களுக்கு தானே வழங்கினார்.

கொடைக்கானலில் நடந்த நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய அமைச்சர் மா.சுப்பிரமணியன்.

தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையத்தில் இருதய நோய்க்கு உடனடியாக சீர் செய்வதற்கு லோடிங் டோசஸ் என்று சொல்லக்கூடிய மருந்துகள் தமிழ்நாட்டில் உள்ள 8,713 துணை சுகாதார நிலையங்களிலும், 2,286 சுகாதார நிலையங்களிலும் 3 மருந்துகள் அடங்கிய 16 மாத்திரைகள் தொகுப்பு இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தின் மூலம் பூம்பாறை கிராமத்தில் 23 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். ஆரம்ப சுகாதார நிலையம், நகர்புற சுகாதார நிலையத்திலும் 2286 கட்டமைப்புகளில் நாய்க்கடி மற்றும் பாம்புக்கடிக்கான மருந்து இருப்பு வைக்கப் பட்டுள்ளது." என்றார்.



## நீர்வரத்து சீரானதை தொடர்ந்து சுருளி அருவியில் குளிக்க 'கிரீன் சிக்னல்': சுற்றுலாப் பயணிகள் குஷி

**கம்பம், ஜூன்.30–**

நீர்வரத்து சீரானதை தொடர்ந்து, கம்பம் அருகே உள்ள சுருளி அருவியில் நேற்று குளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். இதனால், சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.தேனி மாவட்டம், கம்பம் அருகே பிரசித்தி பெற்ற சுருளி அருவி உள்ளது. இதன் அருகே பூதநாராயணர் கோயில், மற்றும் சுருளி வேலப்பர் கோயில் உள்ளது. புண்ணிய ஸ்தலமாக இருப்பதால் அமாவாசை உள்ளிட்ட முக்கிய நாட்களில் பக்தர்கள் நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்வர். விடுமுறை நாட்களில் தேனி மாவட்டம் மட்டுமின்றி தமிழகத்தின் அனைத்துப் பகுதிகள் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து சுற்றுலாப் பயணிகள், பக்தர்கள் இங்கு வருகின்றனர். மேற்கு தொடர்ச்சி மலையில் மேகமலை வனப்பகுதி, தூவானம் அணை, அரிசிப்பாறை, ஈத்தகாடு வனப்பகுதிகளில் மழை பெய்யும் அருவிக்கு நீர்வரத்து இருக்கும். இந்த நிலையில், நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழையால் கடந்த ஜூன் 26ம் தேதி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதையடுத்து பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில், நேற்று காலை அருவிக்கு நீர் வரத்து சீரானது. இதையடுத்து சுற்றுலா பயணிகள் குளிப்பதற்காக அனுமதிக்கப்பட்டனர். இதனால் சுருளி அருவி வனத்துறை செக்போஸ்ட் பகுதியில் காத்திருந்த பயணிகள் மகிழ்ச்சியுடன் அனுமதி சீட்டு பெற்று கேட்டைக் கடந்து அருவியில் குளிப்பதற்காக சென்றனர்.



## 44வது முறையாக முழு கொள்ளளவான 120 அடியை எட்டியது மேட்டூர் அணை

சேலம், ஜூன்.30-

மேட்டூர் அணை கட்டப்பட்ட 91 ஆண்டுகளில் 44வது முறையாக அதன் முழு கொள்ளளவான 120 அடியை எட்டியுள்ளது. 68 ஆண்டுகளுக்கு பிறகு ஜூன் மாதத்தில் மேட்டூர் அணை நிரம்பியுள்ளது.அணையின் பாதுகாப்புக் கருதி 16 கண் மதகுகள் வழியாக உபரி நீர் திறக்கப்படுகிறது.



## பழைய பெருங்களததூர் ஏரி புதுபித்து பொது மக்களுக்கு ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

பெருங்களத்தூர்,
ஜூன்.30-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பெருங்களத்தூரில் அமைந்துள்ள ஏரி ரோட்டரி கிளப் ஆப் மெட்ராஸ் ஆர்.ஐ. மாவட்டம் 3234 மற்றும் எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் பவுண்டேஷன் இணைந்து ஏரியை புதுபிக்கும் பணி முடிவுற்று நிலையில் பொது மக்களுக்கு ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவிற்கு தலைமை வகித்தார் புதுபிக்கபட்ட பெருங்களத்தூர் ஏரியை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா ரிப்பன் வெட்டி பெயர் பலகை திறந்து வைத்து பொது மக்களுக்கு ஒப்படைத்தார். இதில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன், தாம்பரம் மாநகராட்சி மண்டல குழு தலைவர் டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் சேகர்,புகழேந்தி, ரோட்டரி அமைப்பின் தலைவர் செல்ல கிருஷ்ணா, செயலாளர் ராஜேஷ், மணி திட்ட இயக்குனர் டாக்டர் அனுராதா கணேசன், ஏரி மீளுருவாக்க குழு தலைவர் ரோட்டரியன் பி.என்.மோகன், எக்ஸ்னோரா மோகனசுந்தரம், ராதா ஸ்ரீனிவாசன், டி.கே. சீனிவாசன், சீதாராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்த புதுபிக்கபட்ட பணி கார்ப்பரேட் சமூக பொறுப்புத் திட்டத்தின் கீழ் ரியால்டோ என்டர்பிரைசஸ் பிவிடி லிமிடெட் மற்றும் டெல்பி டிவிஎஸ் டெக்னா லஜீஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் நிதியுடன் செய்யபட்டது குறிப்பிடதக்கது.

## மதுரை மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்டிற்கு ரூ.16.50 கோடி நிதி ஒதுக்கி நிர்வாக அனுமதி வழங்கல்

**மதுரை, ஜூன்.30–**

மதுரை மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்ட் மறு வடிவமைப்பிற்கென தமிழ்நாடு அரசு ரூ.16.50 கோடி நிதி ஒதுக்கியதுடன், நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இதனால் விரைவில் டெண்டர் அறிவிப்பு வெளியிட்டு, சீரமைப்பு பணிகள் துவங்க இருக்கிறது. மதுரை மாட்டுத்தாவணியில் ஒருங்கிணைந்த எம்ஜிஆர் பேருந்து நிலையம் அமைந்துள்ளது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் இங்கிருந்து அதிக எண்ணிக்கையில் பேருந்துகள் இயக்கப் படுகின்றன.

எப்போதும் பயணிகள் கூட்டம் நிரம்பி வழியும் 18 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த பேருந்து நிலையத்தில் 8 பிளாட் பாரங்கள் உள்ளன. இந்த பிளாட் பாரங்கள் சீரமைப்புடன், பஸ்ஸ்டாண்டில் மேலும் வசதிகளுடன் கூடுதலாக அழகுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென தமிழ்நாடு அரசு ரூ.16.50 கோடி நிதி ஒதுக்கி, நிர்வாக அனுமதியும் வழங்கியுள்ளது. இதைத் தொடர்ந்து டெண்டர் அறிவிப்பு விரைவில் வெளியிடப்பட்டு, பணிகள் துவங்குகிறது.



இதுகுறித்து மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறும்போது, 'மாட்டுத் தாவணி பஸ்ஸ்டாண்டில் 2023 டிசம்பரில் ரூ.1.8 கோடி செலவில் சீரமைப்பு பணிகள் நடைபெற்றன. அதன்பிறகு ரூ.16.50 கோடி நிதி ஒதுக்கி மறு வடிவமைப்புடன் கூடிய சீரமைப்பு பணிகள் தற்போது நடக்க இருக்கிறது. எந்த கட்டுமானத்தையும் இடித்து அகற்றாமல் அதேநேரம் 8 பிளாட்பாரங்களின் மேற்கூரைகள் சரிசெய்து, பஸ்பே எனப்படும் பேருந்துகளை நிறுத்தும் தரைப்பகுதி முழுவதும் சீரமைக்கப்படுகிறது. இத்துடன் ஒவ்வொரு பிளாட்பாரமும் புதிதாக வடிவமைக்கப்பட்டு அழகுடையதாக மாற்றப்படும்.

பேருந்து நிலையத்திற்குள் முழுமையான சாலைப்பணிகள் மேற்கொள் ளப்படுவதுடன், நுழைவிடங்களில் பிரமாண்ட வளைவுகள் துவங்கி பயணிகளுக்கான இருக்கைகள் வரை அனைத்து பணிகளும் மிக கவனமாக நடைபெற உள்ளது. ஏற்கனவே திட்டமிடப்பட்ட பணிகளில் சில மாற்றங்கள் செய்து கமிஷனர் சித்ரா விஜயன், தலைமை இன்ஜினியர் குழுவினர் மேற்பார்வையில் இப்பணிகள் நடக்கும். சீரமைப்பு பணிகள் நடக்கும்போது அருகாமையில் தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பது உள்ளிட்ட மாற்று வசதிகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தின் மறுவடிவமைப்பிற்கான சீரமைப்பு பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டு பணிகள் துவங்கும்' என்றார்.

## 477 ட்ரோன்கள், 60 ஏவுகணைகள் உக்ரைன் மீது ரஷ்யா மிகப் பெரிய வான்வழித் தாக்குதல்

கீவ், ஜூன்.30-

உக்ரைனுக்கு எதிராக ஒரே இரவில் மிகப் பெரிய வான்வழித் தாக்குதலை ரஷ்யா நடத்தியது. இதில் 477 ட்ரோன்கள் மற்றும் 60 ஏவுகணைகள் உட்பட மொத்தம் 537 வான்வழி ஆயுதங்களை ரஷ்யா வீசியது. இந்த தாக்குதலில் ஒரு குழந்தை உட்பட 6 பேர் காயமடைந்தனர்.

இது குறித்து உக்ரைன் அதிபர் வொலொடிமிர் ஜெலன்ஸ்கி வெளியிட்ட எக்ஸ் பதிவில், "கிட்டத்தட்ட இரவு முழுக்க உக்ரைன் முழுவதும் வான்வழித் தாக்குதல் எச்சரிக்கை சைரன்கள் ஒலித்தன . 477 ட்ரோன்கள் மற்றும் பல்வேறு வகையான 60 ஏவுகணைகள் ஏவப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை ரஷ்ய ஈரானிய ஷாஹெட்கள். உக்ரைனில் உள்ள அனைத்தையும் ரஷ்யா குறிவைத்தது. ஸ்மிலாவில் உள்ள ஒரு குடியிருப்பு கட்டிடமும் தாக்கப்பட்டது, இதில் ஒரு குழந்தை காயமடைந்தது. அவசர உதவிகள் தேவைப்படும் இடங்களில் மீட்புக் குழுக்கள் பணியாற்றி வருகின்றன.

துரதிர்ஷ்டவசமாக, இந்த தாக்குதலை முறியடிக்கும் போது, எங்கள் எஃப்16 விமானி மக்ஸிம் உஸ்டிமென்கோ உயிரிழந்தார். இன்று அவர் 7 வான்வழி



ஏவுகணைகளை அழித்தார். அவரது குடும்பத்தினருக்கு எனது இரங்கல். அவரது மரணத்தின் அனைத்து சூழ்நிலைகளும் விசாரிக்கப்பட வேண்டும் என்று நான் அறிவுறுத்தியுள்ளேன். கடந்த வாரத்தில் மட்டும் 114க்கும் மேற்பட்ட ஏவுகணைகள், 1,270க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் மற்றும் 1,100 கிளைடு குண்டுகளை ரஷ்யா வீசியுள்ளது.

உலக நாடுகளின் அமைதிக்கான அழைப்புகளை மீறி, புதின் நீண்ட காலத்திற்கு போரை நடத்த முடிவு செய்துள்ளார். இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். எனவே, ரஷ்யாவின் மீது அழுத்தம் தேவை, எங்களுக்கு பாதுகாப்பும் தேவை. இதனால் பாலிஸ்டிக் மற்றும் பிற ஏவுகணைகளிலிருந்தும், ட்ரோன்களிலிருந்தும் பாதுகாக்க உக்ரைன் அதன் வான் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும். இதற்காக அமெரிக்க வான் பாதுகாப்பு அமைப்புகளை நாங்கள் வாங்கத் தயாராக இருக்கிறோம். இதற்காக அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் எங்கள் அனைத்து நட்பு நாடுகளின் ஆதரவையும் விரும்புகிறோம்" என்று அவர் கூறினார்.

இரவு நடந்த மிகப் பெரிய வான்வழித் தாக்குதல் உக்ரைன் முழுவதும் உள்ள பகுதிகளை இலக்காகக் கொண்டு தாக்கியது என்று உக்ரைன் விமானப்படையின் தகவல் தொடர்புத் தலைவர் யூரி இஹ்னாட் தெரிவித்தார். மேலும், இந்த தாக்குதலின் போது ட்ரோன்கள், பாலிஸ்டிக் மற்றும் க்ரூஸ் ஏவுகணைகள் உட்பட சுமார் 500 வகையான வான்வழி ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாக உக்ரைன் ராணுவம் தெரிவித்தது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161